மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லக்கூடிய ஓர் அற்புதமான திட்டம் 'அம்மா திட்டம்'. இந்தப் புதிய வட்டம் செயல்பாட்டுக்கு வருகின்றவரை, 'அம்மா திட்டத்தை' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 'அம்மா திட்டம்' ஆரம்பிக்கப்பட்ட இந்த மூன்று மாத காலத்திற்குள், 3,19,204 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சாதனை என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அம்மா திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 393, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

393—

சிற்பக்கலைக் கல்லூரி

*__6791__—**திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், திருமுருகன்பூண்டி பகுதியில் சிற்பக்கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆசிரியர்கள்தான் மாணவர்களை படி, படி என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள். ஆனால், அந்த ஆசிரியர்களுக்கே படி, அதாவது 8 சதவிகித அகவிலைப்படியை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு

2013 மே 3]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியறிதலை அடக்கத்துடனும், பணிவுடனும் வெளிப்படுத்துகிறோம். ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகமும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பின்னால் அணிவகுப்பார்கள் என்கின்ற நம்பிக்கையைப் பணிவுடன் வெளிப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், திருமுருகன்பூண்டி பகுதியில் சிற்பக்கலை பாரம்பரியத்தை மேம்படுத்திட ஏதுவாக புதிதாக சிற்பக்கலைக் கல்லூரி துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி கோயில் 7 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டுக் காலத்தைச் சார்ந்த புராதனக் கோயிலாகும். கொங்கு சோழ மன்னர்களால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அங்கு 300 ஆண்டுக் காலமாக பரம்பரை, பரம்பரையாக சிற்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. அங்கு தற்போது 60 சிற்பக் கலைக்கூடங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. 150 குடும்பங்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. மாமல்லபுரத்தில் இருப்பதைப்போல, சிற்பக்கலைக் கல்லூரி இங்கு உருவாகுமேயானால், திருமுருகன்பூண்டி ஒரு சிறந்த இடமாக மாறும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக திருமுருகன்பூண்டியில் ஒரு சிற்பக்கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மூன்று இடங்களில்தான் சிற்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில், மாமல்லபுரத்திற்கு அடுத்தபடியாக இருக்கிற திருமுருகன்பூண்டியில் அதை அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய்த் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2013 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகரிகத்தின் படிநிலைகள் ஐந்து என்பர் அறிஞர்கள். கால்நடை மேய்த்தல், வேட்டையாடுதல், உழவு செய்தல், நெசவு செய்தல் போன்றவையெல்லாம் அந்த நாகரிகத்தின் படிநிலைகள். தமிழர்கள் இட்ட புனைப் பெயர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். இந்த நாகரிகத்தின் தொன்மையையும், பழமையான ஒரு பண்பாட்டையும் மீட்டுத்தருகிற முதல் மாநிலமாகத் தமிழகம் திகழ்வது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான். அரசினர் கட்டடம் மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மாமல்லபுரத்தில் சிறந்தமுறையில் இயங்கிவருகிறது. இது சிற்பக்கலை பயிற்சி மையம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. அவ்வாறு தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் கோயில் கட்டடக் கலை, சிற்பக்கலை, மரபு வண்ணக் கலை ஆகிய பட்டயப் படிப்புகள் Diploma படிப்பு 1975–ல் தொடங்கப்பட்டது. இது 5 ஆண்டுக்கால படிப்பு. இதனுடைய கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு என்று இருக்கிறது. இந்தப் பயிற்சி மையத்தைப் பின்னாளில் தமிழ்நாடு கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைப் பயிலகம் என்று மாற்றம் செய்யப்பட்டு 5 ஆண்டுகளாக இருந்த இந்தப் படிப்பை 3 ஆண்டுக் காலமாக பட்டப் படிப்பாக, அதாவது Degree ஆக, இளங்கலை கட்டடக் கலை, இளங்கலை சிற்பக்கலை என்று தொடங்கப்பட்டது. இது 1981–ல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, 1) கற் சிற்பம், 2)சுதைச் சிற்பம், (சுதைச் சிற்பம் என்றால் சுண்ணாம்பால் கட்டப்படுவது) 3) மரச் சிற்பம், 4) உலோகச் சிற்பம் என நான்கு விருப்பப் பாடங்கள் தொடங்கப்பட்டன. இந்த படிப்பிற்கும் கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஐந்தாண்டுக் காலம் என்று கால அளவு இருந்தது. பிறகு கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு என்றும், கால அளவு 3 ஆண்டுகள் என்றும் மாற்றப்பட்டது.*

முற்பகல் 11–10

தற்போது மாறிவருகிற சூழ்நிலையில், அறிவியல் சார்ந்து, கணினியுகம் சார்ந்திருக்கிற சூழ்நிலையில், மாணவர்களுடைய

2013 மே 3]

எண்ணிக்கை கொஞ்சம், கொஞ்சமாக குறைந்து வருகிறது. ஆகவே, இதை எவ்வாறு பெருக்க வேண்டும், உயர்த்த வேண்டுமென்று சிந்தித்து அகில இந்திய தொழில்நுட்பக் கூர்மத்தின் (A.I.C.T.E.) ஒப்புதல்பெற்று மாணவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கும், மேலும் இந்திய அளவில் நுண்கலைக் கல்லூரிகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு இணையாக நம்முடைய மாணவர்களும் மாறுவதற்காக அவர்களின் தரத்தை உயர்த்துவதற்காகவும் அரசு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற, திருமுருகன்பூண்டியில் சிற்பக்கலைக் கல்லூரி அமைப்பதற்கு சாத்தியகூறுகள் இல்லை.

சிற்பக்கலை, கட்டடக் கலை, நுண்கலை போன்ற கலைகளைக் கற்க வேண்டுமென்று சொன்னால், பெரும் கவி உள்ளமும், கலை உள்ளமும் கொண்ட மாணவர்களால்தான் அது இயலும். அப்படி கவி உள்ளமும், கலை உள்ளமும் கொண்ட இடமாக, இயற்கைச் சூழலோடு அமைந்திருக்கிற கடலும், கடல் சார்ந்த பகுதியுமாக மாமல்லபுரம் இருக்கிறது. போதிய இட வசதியும் அங்கிருக்கிறது. போதிய தங்கும் வசதியும் அங்கிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட இடத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்திட்ட 300 ஆண்டுக் காலமாக பரம்பரை, பரம்பரையாக சிற்பக்கலை அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இளைஞர்கள் முதல் அனைவரும் குடும்பம், குடும்பமாக அந்த வேலையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை வளர்க்க வேண்டுமென்று சொல்கிறபோது, தமிழ்நாட்டிலே சுவாமிமலை, திருமுருகன்பூண்டி மற்றும் மாமல்லபுரம் இந்த 3 இடங்களிலேதான் சிற்பக்கலைத் தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே போதிய இட வசதியிருக்கிறது. அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஏராளமான இடம் அங்கேயிருக்கிறது, வாய்ப்புகள் இருக்கின்றன. ஆற்றோரமாக*

இடம் இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு, கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற திருமுருகன்பூண்டி குறித்து துறையின் மூலமாக அனைத்து ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படும். உரிய முறையிலே தகுதியும், மிகுதியும் அவற்றுக்கு இருக்குமென்று சொன்னால், இதனை தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய முறையிலே பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

நேற்றைக்கு நான் ஒரு நாவலை, ஒரு புதினத்தை வாசித்தேன். 'காவல் கோட்டம்' என்கிற ஒரு நாவல். திரு. வெங்கடேசன் என்பவர் எழுதிய அந்த நாவல் சாகித்திய அகாடமி பரிசு வென்றிருக்கிறது. அந்த நாவலில் ஒரு செய்தியை அவர் குறிப்பிடுகிறார். இராணி மங்கம்மாள் 300 ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு வீட்டிற்கும் ஆடு தருவேன் என்று அறிவித்திருக்கிறார். அறிவித்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்தை அவரால் செயல்படுத்த முடியவில்லை. 300 ஆண்டுகளுக்குப் பிறகு இராணி மங்கம்மாவாக வாழுகிற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எந்த நல்ல திட்டமாக இருந்தாலும், நல்ல செயலாக இருந்தாலும் அதைச் செயல்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ள தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) உரிய முறையிலே பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்பக்கலை அழியக் கூடாது. அதைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். இந்த அரசின் கொள்கையாகும். ஆனால், இன்றைய நவீன உலகத்தில் இளைஞர்கள், மாணவர்கள் சிற்பக்கலையைக் கற்பதற்கு முன்வருவதில்லை. அதனால்தான் மிகவும் பிரசித்திப்பெற்ற மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக்கலைக் கல்லூரியில்கூட மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்தார்கள். மாணவர்கள் இப்பொழுதெல்லாம் இந்தக் கலைகளை கற்க விரும்பவில்லை; முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஊரில், ஒரு புதிய கல்லூரியைத் துவக்குவதில் அரசுக்கு எந்த சிரமமும் இல்லை. ஆனால், போதுமான அளவில் மாணவர்கள் வந்து சேர்வார்கள்; பயில்வார்கள் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளிக்க வேண்டும். அப்படி அளித்தால், நாங்கள் கல்லூரியைத் துவக்குவதற்குத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 394, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

394—

24 மணிநேர மருத்துவமனை

***4235—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் 24 மணிநேர மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்